பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 05 2026** **THURSDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் இயற்கை எரிவாயு நாடு முழுவதும் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

2. தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டு சதவீத கூடுதல் அகவிலைப்படி வழங்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

3. சனாதனத்திற்கும், மக்களின் மத உணர்வுகளுக்கும் எதிராக தவெக-வினர் கருத்துகளை தெரிவிப்பது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

4. தென் தமிழக கடலோர மற்றும் டெல்டா மாவட்டங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின், **Shriyanshi Valishetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் இயற்கை எரிவாயு நாடு முழுவதும் தட்டுப்பாடின்றி கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்நாட்டில் சமையல் எரிவாயு விநியோகம் சீராக இருப்பதாகவும், எந்தவொரு பகுதியிலும் பற்றாக்குறை ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முழு அளவில் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

எரிவாயு விநியோகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டு 70 சதவீதம் வர்த்தக பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து இதுவரை 7 லட்சத்திற்கும் மேற்பட்ட சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குழாய் வழி சமையல் எரிவாயு இணைப்பு பெற புதிதாக 7 லட்சத்து 50 ஆயிரம் நுகர்வோர் விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களில் ஒரு கோடியே 40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் சிலிண்டர் கோரி பதிவு செய்திருப்பதாகவும், ஒரு கோடியே 39 லட்சம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி சுஜாதா சர்மா கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ஜனவரி ஒன்றாம் தேதி முதல், இரண்டு சதவீத கூடுதல் அகவிலைப்படி வழங்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, தற்போது 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 60 சதவீதமாக உயருகிறது.

இந்த அகவிலைப்படி உயர்வால், 16 லட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆயிரத்து 230 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் இன்று 12 காவல்துறை உயரதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்த திரு டேவிட்சன் தேவாசிர்வாதம், தமிழ்நாடு பால் கூட்டுறவு உற்பத்தியாளர் கூட்டமைப்பின் ஊழல் தடுப்பு தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்த திரு செந்தில்வேலன், காவல்துறை பயிற்சி கல்லூரியின் கூடுதல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

அஇஅதிமுக கொறடா உத்தரவை மீறி செயல்பட்டுள்ள உறுப்பினர்கள் மீது பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துமாறு ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரிடம்,

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் ஆளுநரை சந்தித்து அளித்த மனுவில், தங்கள் கட்சியின் கொறடா ஓ எஸ் மணியனின் உத்தரவுக்கு எதிராக அஇஅதிமுக-வின் 25 உறுப்பினர்கள் பேரவையில் தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த 25 உறுப்பினர்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று பேரவைத் தலைவரிடம் தாங்கள் கோரிக்கை விடுத்திருப்பதாக திரு எடப்பாடி பழனிசாமி அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இன்று காலை திரு எடப்பாடி பழனிசாமி பேரவைத் தலைவரை சந்தித்து உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியபோது பேசிய பேரவைத் தலைவர், தமக்குள்ள அதிகாரத்தின்படி அதிகப்படியான உறுப்பினர்கள் கொண்ட திரு வேலுமணி தலைமையிலான பிரிவினருக்கு வாக்குகள் செலுத்துவதற்கான வாய்ப்பை தாம் வழங்கியதாக கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் 22 உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக நேற்று வாக்களித்தனர்.

<<<<<<>>>>>>

சனாதனத்திற்கும், மக்களின் மத உணர்வுகளுக்கும் எதிராக தவெக-வினர் கருத்துகளை தெரிவிப்பது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், தங்களின் அரசை, அனைவருக்குமான அரசு என்று விளம்பரப்படுத்திக் கொண்டு, அக்கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் மத நம்பிக்கைக்கு எதிராக தேவையற்ற கருத்துகளை கூறுவதை தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை விரைவில் வங்கிக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த திட்டத்தை மறுசீரமைப்பு செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்ட பயனாளிகளுக்கு மாதாந்திர கல்வி உதவித்தொகை ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

திருப்பூர் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளை சேலம் ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளர் திரு சரவணன் இன்று ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சபரிஷ் — 48 Sec.)***

<<<<<<>>>>>>

தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Voice Byte —வி ஆர் துரை -  47 Sec. )***

*<<<<<<>>>>>>*

***மாவட்டச் செய்திகள்***

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை கோடை வெப்பத்திலிருந்து பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திருமதி. சினேகா ஆய்வு செய்தார்.

----------------

தேனி மாவட்டம் மீறுசமுத்திரம் கண்மாயை நவீனப்படுத்தும் பணிகளை ஆட்சியர் திரு. ரஞ்ஜீத்சிங் ஆய்வு மேற்கொண்டார்.

----------------

மதுரை மாவட்ட வருவாய் கிராமங்களில் நாளை முதல், ஜூன் மாதம் 15-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள பி எம் கிசான் திட்ட சிறப்பு முகாமை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் திரு பிரவீன்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

----------------

கடலூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களின் உட்கட்டமைப்பு வசதி குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் பள்ளி வாகனங்களை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று ஆய்வு செய்தார்.

------------

நாகை மாவட்டம் சிக்கல் அருகே தண்ணீர் தொட்டியில் மூழ்கியதில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Shriyanshi Valishetty,** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-19, 23-21** என்ற செட் கணக்கில், தைவானின் **Yuan Chi Liao-**வை வென்றார்.

இப்போட்டியில் **Tushar Suveer, Ashmita Chaliha** ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்க்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-------------

ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச யோகாசன போட்டியில் பதக்கங்களை வென்று திரும்பிய மாணவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம் கும்பிடிப்பூண்டியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

<<<<<<**END**>>>>>>